# நேற்று (2002) - இன்று (2007) - நாளை (2017)

BSNL நிறுவனம் 01-10-2000த்தில் துவக்கப்பட்டு இரண்டு ஊதிய விகித மாற்றங்களை நாம் சந்தித்து உள்ளோம். மூன்றாவது ஊதிய மாற்றம் 01-01-2017 முதல் நடைமுறைப்படுத்த வேண்டும். இந்தச் சூழலில் கடந்த இரண்டு ஊதிய மாற்றங்களில் BSNLEU செய்த சாதனைகளையும், NFTE செய்த துரோகங்களையும் ஊழியர்களாகிய நாம் புரிந்து கொள்வது என்பது அவசியமாகிறது.

## முதல் ஊதிய மாற்றம் (2002)

**NFTE யின் துரோகம் நம்பர் 1 :-** முதல் ஊதிய மாற்றத்தின் போது எந்த சங்கத்திற்கும் அங்கீகாரம் கிடையாது. எனவே BSNLல் உள்ள அனைத்து சங்கங்களும் (APPLICANT UNIONS) ஒன்றிணைந்து ஊதிய மாற்ற கோரிக்கையினை வகுத்தெடுத்தனர். அதில் RM மற்றும் Group D ஊழியர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் ரூபாய் 4,400 என்பதே அனைத்து சங்கங்களின் கோரிக்கையாகும். ஆனால் திடீரென்று NFTE மட்டும் 3,400 கொடுத்தால் போதும் என்ற கோரிக்கை வைத்து மகஜர் கொடுத்தது. அனைத்து சங்கங்களும் கேட்டுக் கொண்டதைவிட ரூபாய் 1000 குறைவாக கேட்டதற்கு என்ன காரணமாக இருக்க முடியும்? ஒரே காரணம் தான். அரசிற்கு ஆதரவாக ஜால்ரா அடிப்பது மற்றும் ஊழியர்களுக்கு துரோகம் இழைப்பதைத் தவிர வேறு என்னவாக இருக்க முடியும்? NFTE யின் துரோகத்தையும் மீறி BSNL ஊழியர் சங்கம் எடுத்த கடும் முயற்சியின் காரணமாக Group D மற்றும் RM ஊழியர்களுக்கு 4,000 ரூபாய் அடிப்படை சம்பளமாக நிர்வாகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## இரண்டாவது ஊதிய மாற்றம் (2007)

**NFTE யின் துரோகம் நம்பர் 2:-** BSNL ஊழியர் சங்கத்தின் தலைமையிலான UNITED FORUM செய்த இரண்டாவது ஊதிய விகிதமாற்றம் தான் BSNL ஊழியர்கள் இதுவரை கண்ட ஊதிய மாற்றத்திலேயே மிகச் சிறந்த ஊதிய மாற்றமாகும். இந்த நல்ல சிறந்த ஊதியம் பெற BSNL ஊழியர் சங்கம் கடும் போராட்டத்தை நடத்தியது. ஏப்ரல் 2009-ல் BSNL அதிகாரிகளுக்கு புதிய சம்பள விகிதம் அறிவிக்கப்பட்டது. அதிகாரிகளுக்கு 68.8% பஞ்சப்படி இணைப்பு, 30% சம்பள உயர்வு, பழைய ஊதிய விகிதத்தில் 1.91% மடங்கில் புதிய ஊதிய விகிதம், 3% ஆண்டுயர்வு, கால நிர்ணயம் இல்லாத புதிய சம்பள விகிதம் என்று DPE அறிவித்தது. இதே அடிப்படையில் ஊழியர்களுக்கும் 68.8% பஞ்சப்படி இணைப்புதான் கொடுக்கப்படும் என்ற நிலையை நிர்வாகம் எடுத்தது. புதிய சம்பள விகிதத்தை 10 வருட காலம் என்றும் முன் மொழிந்தது. ஆனால் BSNL ஊழியர் சங்கம் அதிகாரிகளுக்கு வழங்கியதை போல கால நிர்ணயம் இல்லாத சம்பள விகிதம், 78.2 பஞ்சப்படியை இணைத்து புதிய ஊதிய விகித நிர்ணயம் என்று உறுதியாக கோரியது.

இந்தச் சூழ்நிலையில் NFTE மற்றும் FNTO சங்கங்கள் ஊழியர் மத்தியில் பொய்ப் பிரச்சாரத்தை கட்டவிழ்த்து விட்டன. அதாவது ஊதியம் மாற்ற கால தாமதத்திற்கு BSNL ஊழியர் சங்கம் தான் காரணம் என்றன. ஊதிய மாற்றப் பேச்சு வார்த்தையில் இணைந்து ஈடுபடலாம் என்று NFTE சங்கத்தை கேட்டபோது இணைந்து வர மறுத்துவிட்டது. இந்த சூழ்நிலையில் FNTO சங்கம் ஊழியர்கள் மத்தியில் BSNL நிர்வாகம் எதைக் கொடுத்தாலும் பெற்றுக் கொள்ள தயாராக இருப்பதாக கையெழுத்து இயக்கம் நடத்தியது. NFTE மறைமுகமாக FNTO-க்கு ஆதரவளித்தது. BSNL நிர்வாகம் இப்பிரிவினையைப் புரிந்து கொண்டு நியாயமான ஊதியத்தை தர மறுத்தது.

எனவே நியாயமான சிறந்த ஊதியத்தைப் பெற போராடுவதே சிறந்த வழி என்று முடிவெடுத்து 2009 ஆண்டு ஆகஸ்ட் 19, 20 ஆகிய இரு தினங்களில் வேலை நிறுத்த அறிவிப்பை கொடுத்தது. NFTE மற்றும் FNTO சங்கத் தலைமைகள் BSNL CMD யை சந்தித்து இந்த வேலை நிறுத்தத்தில் NFTE மற்றும் FNTO சங்கங்கள் கலந்து கொள்ளவில்லை என்றும், வேலை செய்யும் ஊழியர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தன.

NFTE மற்றும் FNTO சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளாமல் இருந்தால்கூட தவறில்லை. மாறாக வேலை நிறுத்தத்தை காட்டிக் கொடுத்து உடைக்க நினைத்த துரோகச் செயலை செய்தனர். இவர்கள் செய்த பாவத்திற்கு எந்த இடத்திலும் மன்னிப்பு கிடையாது. ராஜாவை மிஞ்சிய ராஜ விசுவாசிகளாக தங்களைக் காட்டிக் கொண்ட NFTE சங்கத்தை ஊழியர்கள் சரியாக புரிந்து கொண்டனர். வேலை நிறுத்தம் பிரம்மாண்டமாக நடைபெற்றது.

அதிகாரிகளுக்கு அதிகமாக ஊதியம் தந்து பழக்கப்பட்ட நிர்வாகத்தை பணிய வைத்து, அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் சமமான ஊதியத்தை பெற்று தந்தது. 68.8% பஞ்சப்படி இணைப்பு, 30% சம்பள உயர்வு, பழைய ஊதிய விகிதத்தில் 1.91% மடங்கில் புதிய ஊதிய விகிதம், 3% ஆண்டுயர்வு, கால நிர்ணயம் இல்லாத புதிய சம்பள விகிதம் ஆயவை பெற்றுத்தரப்பட்டன. அதே நேரத்தில் எதிர்காலத்தில் 78.2% பஞ்சப்படி இணைப்பை அடையும் வகையில் முக்கியமான ஷரத்து ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டது. பிற்காலத்தில் அதிகாரிகளுக்கு 78.2% பஞ்சப்படி இணைக்கும் போது

ஊழியர்களுக்கும் அது வழங்கப்படும் என்று சேர்க்கப்பட்டது. இதன் மூலம் ஊழியர்களையும் அதிகாரிகளையும் 78.2% பஞ்சப்படி இணைப்பு பிரச்சனைக்காக ஒன்றாக இணைத்து பிற்காலத்தில் போராட தீர்க்க தரிசனமாக வழி வகை செய்தது BSNL ஊழியர் சங்கம்.

எதிர்காலத்தை எடை போடுவதில், நிர்ணயம் செய்வதில், அரசை எதிர்த்து போராடுவதில் என்றும் முன்னிலையில் BSNL ஊழியர் சங்கம் இருக்கின்றது. ஆனால் மறுபக்கம் NFTE சங்கம் தொடர்ந்து துரோகம் செய்து வந்ததாலும், அரசுக்கு ஆதரவான நிலையை எடுத்ததாலும் ஊழியர்கள் மத்தியில் அம்பலப்பட்டு அன்னியப்பட்டு அலங்கோலமாக இருக்கின்றது.

இன்றைய தினம் BSNL ஊழியர்கள் வங்கி ஊழியரைக் காட்டிலும் அதிகமான ஊதியத்தைப் பெறுகின்றனர் என்றால் அதற்கு BSNL ஊழியர் சங்கம் நடத்திய போராட்டங்களே காரணமாகும். ஊழியர் சங்கம் அங்கீகரிக்கப்பட்டு 11 ஆண்டுகளில் ஊழியரின் சம்பளம் 5 மடங்காக உயர்ந்திருக்கின்றது. உதாரணமாக...

**தோழர் V.வெங்கட்ராமன் STS (O) கோவை அவர்கள்** 2004 ஆம் ஆண்டு பெற்ற மொத்த சம்பளம் 15,648 ரூபாய். 2016 ஆம் ஆண்டு பெறுகின்ற மொத்த சம்பளம் 76,341 ரூபாய். 5 மடங்கு உயர்வு.

மற்றுமொரு உதாரணத்தையும் பார்ப்போம்......

சமீபத்தில் வங்கியில் ஊதிய மாற்ற ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. BSNL-ல் இன்னும் ஏற்படவில்லை.

வங்கியில் BE படித்த ஓர் எழுத்தரின் சம்பளத்தோடு (BE படித்தால் இரண்டு ஆண்டுயர்வுத் தொகை உண்டு.) BSNL நிறுவனத்தில் புதிதாக பரிவு அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட ஊழியரின் சம்பளத்தை ஒப்பிட்டுப் பார்ப்போம்.

வங்கி எழுத்தரின் மொத்த சம்பளம் : ரூபாய் 32,972

BSNL எழுத்தரின் மொத்தச் சம்பளம் : ரூபாய் 24,659 (C CLASS நகரம்)

அதாவது ஊதிய மாற்றம் BSNL நிறுவனத்தில் நடைபெறாத சூழலில் BE படிக்காத ஓர் எழுத்தர் 687 ரூபாய் அதிக ஊதியம் பெறுகின்றார். 01-01-2017 முதல் ஊதிய மாற்றம் ஏற்பட்ட பிறகு இன்னும் வங்கியை விடக் கூடுதலாக BSNL எழுத்தர் பெறுவார். இந்தச் சரித்திரமிகு சாதனைக்கு சொந்தக்காரன் சரித்திர நாயகன் BSNL ஊழியர் சங்கம் தான்.

**நாளை (01-01-2017) மூன்றாவது ஊதிய மாற்றம்**

01-01-2017ல் நடைபெற உள்ள ஊதிய மாற்றம் என்பது BSNLல் உள்ள அனைத்து ஊழியர்களுக்கும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் 80% ஊழியர்கள் பணி ஓய்வு பெற்றுவிடுவார்கள். எனவே நல்ல ஊதியம் பெற்றால் மட்டும் நல்ல பென்ஷனும் மற்ற ஓய்வு ஊதிய பலன்களும் கிடைக்கும். எனவே கண்ணும் கருத்துமாக செயல்பட்டு ஒரு சிறந்த ஊதியத்தை பெற்றுத்தர BSNL ஊழியர் சங்கம் வாக்குறுதி அளிக்கின்றது.

சமீபத்தில் BSNL CMD அவர்கள் பெங்களூரில் நடந்த ஓர் கூட்டத்தில் BSNL தொடர்ந்து நஷ்டத்தில் சென்றால் 2017ல் புதிய ஊதிய மாற்றம் நடைபெறாது என்று தன்னிச்சையாக அறிவித்தார். இதை கேள்விப்பட்டவுடன் CMDயின் கூற்றினை BSNL ஊழியர் சங்கம் கண்டித்து இணைய தளத்தில் செய்தி வெளியிட்டது. BSNL CMD யிடம் நேரிடையாகவும், கடிதம் மூலமாகவும் எதிர்ப்பினை பதிவு செய்த ஒரே சங்கம் BSNL ஊழியர் சங்கம் தான். NFTE சங்கம் BSNL CMD யின் கருத்தை எங்கும் எதிர்க்கவில்லை. சரண்டர் சங்கமான NFTE, BSNL நிர்வாகத்தையோ BSNL அதிகாரிகளையோ எதிர்க்க முடியுமா? சுண்டு விரலைக் கூட அசைக்காமல் மௌன விரதத்தில் உள்ளது.

ஊதிய மாற்றம் சம்பந்தமாக DPE கொடுத்துள்ள வழி காட்டுதல்படி ஒரு பொதுத்துறை நிறுவனம் நட்டமடைந்து, நலிவடைந்த நிறுவனமாக அறிவிக்கப்பட்டால் மட்டுமே ஊதிய மாற்றத்திற்கு மத்திய அரசின் அனுமதி தேவை. மற்ற நிறுவனங்களுக்கு அந்த நிர்வாகமே ஊதிய மாற்றத்தை வழங்கலாம். BSNL நிறுவனம் நஷ்டத்தில் இருந்தாலும் நலிவடைந்த நிறுவனமாக அறிவிக்கப்படவில்லை. எனவே BSNL ஊழியர்களுக்கு ஊதிய மாற்றம் செய்வதில் எந்த தடையும் கிடையாது.

**புதிய ஊதியம் பெறுவது சவால் நிறைந்த பணியாகும். BSNL ஊழியர் சங்கம் இந்தச் சவாலை ஏற்கின்றது. BSNL ஊழியர்களுக்கு மிகச் சிறந்த ஊதிய மாற்றத்தை பெற்றுத் தர உறுதியளிக்கின்றது.**

# வாக்களிப்பீர்! செல் போன் சின்னத்தில்! வளம்பெறுவீர் வாழ்க்கையில்!!




தேர்தல் நாள் : 10-05-2016

தோழமையுடன்

**BSNLEU - SNATTA, BSNLMS - தமிழ்மாநிலம்**